بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 07/03/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- **ஹதீஸுகள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் துஆக்களின் முக்கியத்துவம்**
- **அருளுக்குரிய ரமலான் தொடர்பாக ஜமாஅத்தினர்களுக்கு பொன்னான அறிவுரைகள்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

وَإِذَا سَأَلَكَ عِبَادِىْ عَنِّىْ فَإِنِّىْ قَرِيْبٌ ؕ أُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ ۙ فَلْيَسْتَجِيْبُوْا لِىْ وَلْيُؤْمِنُوْا بِىْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ ﴿۱۸۷﴾

அல்லாஹ் கூறுகின்றான்: என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றி கேட்டால், நிச்சயமாக நான் அருகில் இருக்கின்றேன். துஆ செய்யக் கூடியவர் என்னை அழைக்கும் போது நான் அவருடைய துஆவுக்கு பதிலளிக்கின்றேன். ஆகவே அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொள்ள வேண்டும்; என் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள். (திருக்குர்ஆன் 2:187)

தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்ற சிந்தனை ரமலான் ஆரம்பித்த உடனேயே உள்ளத்தில் தோன்றி விடுகின்றது. ஏனென்றால், இது அருள்களின் மாதமாக உள்ளது. ஆகவேதான், பொதுவாகவே மக்கள் பள்ளிவாசலின் பக்கம் அதிகம் திரும்பி விடுகிறார்கள். நாம் அல்லாஹ்வின் பக்கம் செல்ல வேண்டும் என்று குறைந்தபட்சம் இந்நாட்களில் மக்களுக்கு சிந்தனை ஏற்படுவதும் அல்லாஹ்வுடைய அருளேயாகும்.

ரமலானின் நாட்களில் நரகத்தின் வாயில்களை நான் மூடி விடுகின்றேன்; ஷைத்தானை விலங்கிட்டு விடுகின்றேன். சொர்க்கத்தின் கதவுகளை திறந்து விடுகின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். ரமலானில் மட்டும்தான் இறைவணக்கங்களின் தேவை உள்ளது என்று இதன் மூலமாக மக்கள் நினைக்கிறார்கள். இந்த சிந்தனை தவறாகும்! ரமலானில் இறைவணக்கங்களின் பக்கம் அல்லாஹ் எதற்காக கவனமூட்டியுள்ளான் என்றால், அதை நீங்கள் உங்களது வாழ்க்கையின் அங்கமாக ஆக்க வேண்டும் என்பதற்காக. இது இல்லை என்றால், பிறகு ரமலானில் மட்டுமே இறைவணக்கங்கள் புரிவது எந்த பயனையும் தராது!

ரமலானில் இரவில் நம்பிக்கையுடனும், நன்மையை எதிர்பார்த்தும் தொழுபவரின் முந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் அதிகமாக மன்னிக்கக் கூடியவனாக இருக்கின்றான். இவ்வருடத்தில் உங்களிடமிருந்து தவறுகள் நிகழ்ந்துள்ளனவென்றால், இனி வரக்கூடிய காலகட்டத்தில் அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை செலுத்தக்கூடியவர்களாக ஆவீர்கள் என்றும், அல்லாஹ் கட்டளையிட்டுள்ள அனைத்து நன்மைகளையும் செய்யக் கூடியவர்களாக

ஆவீர்கள் என்றும் நீங்கள் புதிதாக மீண்டும் இவ்வாறு உறுதிமொழி எடுத்துக் கொள்ள அவன் இந்த வாய்ப்பை உங்களுக்கு வழங்கி இருக்கின்றான். இவ்வாறு நீங்கள் நடந்து கொண்டால் நிச்சயமாக அவன் பெரும் கருணையுடன் உங்கள் பக்கம் திரும்புவான். ‘என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால்....’ என்று இந்த வசனத்தில் அல்லாஹ் கூறியிருக்கின்றான். இங்கு ‘அடியார்கள்’ என்பது இறைவனை நேசிக்கக் கூடியவர்களைக் குறிக்கும். நேசிக்கக்கூடியவருக்கு 11 மாதங்கள் வரை நேசம் நினைவுக்கு வராமல் ஒரே ஒரு மாதத்தில் மட்டுமே அவர் நேசத்தை வெளிப்படுத்துகிறார் என்றால் இது சாத்தியமான விஷயமா என்ன? ஆகவே, அல்லாஹ்வே! நீ எங்களுக்கு உன்னுடைய நெருக்கத்தை வழங்குவாயாக! ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய துஆக்களை செய்வதற்கு எங்களுக்கு நல்வாய்ப்பு வழங்குவாயாக என்று நாம் துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும்.

அல்லாஹ்வுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகள், அடியார்களுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகள் ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளான். திருக்குர்ஆனில் 700 கட்டளைகள் உள்ளன என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறியுள்ளார்கள். 700 ஐ விடவும் அதிக கட்டளைகள் உள்ளன என்று இன்னோரிடத்தில் அன்னார் கூறியிருக்கிறார்கள். நாம் ரமலானில் திருக்குர்ஆன் ஓதும்போது அதனுடைய கட்டளைகளையும் தேடுவோம் என்பது வெளிப்படை. கட்டளைகளை தேடும்போது அவற்றின்படி செயல்படுவதற்கும் முயற்சி செய்யக் கூடியவர்களாக ஆவோம். இதுவே உண்மையாக நேசிக்க கூடியவரின் வேலையாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: ஈமானும் நற்செயலும் எப்படிப்பட்ட விஷயங்கள் என்றால், அவை சேர்ந்தே இருக்கின்றன. அல்லாஹ்வின் மீது நம்பிக்கையும், அவனுடைய கட்டளைகளின் படி செயலும் இருக்கும் என்றால் அவ்வாறான மனிதர் பிறகு இறைவனுடைய நண்பராக ஆகி விடுகின்றார். இறைவனுடைய நட்பு வழங்கப்படும் போது அதன் மூலமாக அல்லாஹ்வுடைய நெருக்கம் கிடைக்கின்றது. பிறகு, அந்த நெருக்கத்தில் முன்னேறிக் கொண்டே செல்கிறார்கள். இந்த நெருக்கம் ஓரிடத்தில் நின்று விடக்கூடியது கிடையாது! அல்லாஹ் இந்த நெருக்கத்தின் விளைவாக துஆக்களையும் கேட்பான். ஆகவே, ரமலானில் நாம் இந்த தரத்தை பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

துஆக்கள் ஒப்புக்கொள்ளப்படுவதற்காகவும் அல்லாஹ் சில நிபந்தனைகளை வைத்திருக்கின்றான். அதில் முதலாவது நிபந்தனை, அவனுடைய அடியாராக ஆகி இருக்க வேண்டும்; கலப்பற்ற முறையில் அவனை வணங்க வேண்டும்; அனைத்து ஆற்றல்களின் தலையூற்றாக அவனை கருத வேண்டும்; எவ்வித பொய்யான கடவுளையும் உருவாக்கிக் கொள்ளக் கூடாது என்பதாகும். இல்லையென்றால், இது ஷிர்க்கின் பக்கம் அழைத்துச் செல்லக்கூடிய விஷயமாக ஆகிவிடும். அனைத்தையும் விட பெரிய விஷயம், அல்லாஹ்விடம் அவனுடைய கருணையையும் பரிவையும் கேட்க வேண்டும். அவனுடைய கட்டளைகளின்படி செயல்படுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் எண்ணற்ற இடங்களில் நன்மைகளில் நிலைத்திருப்பதன் பக்கம் நமக்கு கவனமூட்டி இருக்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் இதன்பக்கம் கவனமூட்டி இருக்கிறார்கள். பைஅத்தின் 10 நிபந்தனைகளில் பெரும்பாலான நிபந்தனைகள் இறைவனுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகள், அடியார்களுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகள் ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டுகின்றது. ஆகவே, இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். நாம் இதை செய்வோம் என்றால் பிறகு அல்லாஹ் நிச்சயமாக நமது நண்பனாக ஆகி விடுவான். அவன்

நமது துஆக்களை கேட்பான். எவர்கள் பொறுமையின்மையை காட்டுவதில்லையோ அவர்களுடைய துஆக்களை அல்லாஹ் கேட்பான் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நான் எவ்வளவோ துஆக்களை செய்தேன்; அல்லாஹ் கேட்கவே இல்லை என்று அவர்கள் கூற மாட்டார்கள். அன்னார் கூறுகிறார்கள்: இ(வ்வாறு கூறுவ)து நிராகரிப்பாகும். அல்லாஹ்விடமிருந்து விலக்கி கொண்டு செல்லக்கூடிய விஷயமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இதுவோ இரு நண்பர்களின் விவகாரமாக உள்ளது. சில சமயம் ஒருவர் தமது நண்பருடைய பேச்சை ஒப்புக்கொள்கிறார்; சில சமயம் (தமது பேச்சை) நண்பரை ஒப்புக் கொள்ள வைக்கிறார். இவ்வாறு இறைவனும் நடந்து கொள்கின்றான். ஆனால், வெளிப்படையாக இறைவன் ஒரு நம்பிக்கையாளருடைய துஆவை மறுக்கிறான் என்றால் அதுவும் உண்மையில் அவருடைய நன்மைக்காகவே ஆகும்.

அன்னார் கூறுகிறார்கள்: என் அடியார்கள் என்னைப் பற்றி கேள்வி கேட்டால் - இறை இருப்புக்கான சான்று என்ன என்று கேட்டால் அதற்கான பதில், நான் மிக அருகில் இருக்கிறேன். பெரும் சான்றுகளுக்கான தேவையொன்றும் கிடையாது! என் இருப்புக்கான சான்று மிகவும் எளிதாக கிடைத்து விடுகின்றது. அந்த சான்று என்னவென்றால், துஆ செய்யக்கூடியவர் என்னை அழைக்கின்ற போது நான் அவருடைய துஆவை கேட்கிறேன். எனது இல்ஹாம் மூலமாக அவருடைய வெற்றிக்கான நற்செய்தியை வழங்குகின்றேன். திருக்குர்ஆனில், يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ (அவர்கள் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வார்கள்) என்று கூறப்பட்டுள்ளதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மிகவும் நுட்பமான விளக்கத்தை கொடுத்துள்ளார்கள். அன்னார் கூறுகிறார்கள்: மறைவானது என்பதும் இறைவனுடைய பெயராகும். ஒவ்வொரு துஆவுக்கு முன்பும், இறைவன் இருக்கிறான்; அவன் எண்ணற்ற பண்புகளைக் கொண்டவனாக இருக்கிறான் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். இந்த நம்பிக்கையுடன் முன்னேறும்போது பிறகு உங்களுக்கு இறைவனைப் பற்றிய உண்மையான ஞானம் கிடைக்கும்.

ரமலானில் மட்டுமே தொழுகைகளின் பக்கம் கவனம் பிறக்க வேண்டும் என்பது கிடையாது. அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் தொழுகைகளின் பக்கம் மிக அதிகம் கவனம் செலுத்துகிறார்கள். ஆயினும், இதுவும் குறைவுதான்!

ஆகவே, நாம் ரமலானை எப்படிப்பட்ட ரமலானாக ஆக்க வேண்டும் என்றால் அது நம்முடைய இறைவணக்கங்களின் தரத்தை உயர்த்தக்கூடியதாக இருக்க வேண்டும். நமக்கு இறை நெருக்கத்தை வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும். அதன் மூலமாக நாம் அல்லாஹ்வின் கலப்பற்ற அடியார்களாக ஆக வேண்டும். ஆகவே, இந்த ரமலானில் நமது இறைவணக்கங்களுக்கு உயிரூட்ட வேண்டும் என்ற உறுதிமொழியை நாம் எடுக்க வேண்டும். பிறகு அதற்காக அல்லாஹ்விடம் துஆவும் கேட்க வேண்டும். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: துன்பம் வந்த பிறகு செய்யும் துஆவுடன் ஒப்பிடுகையில், வருவதற்கு முன்பு செய்யும் துஆ பயனளிக்க கூடியதாக இருக்கின்றது. அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் துஆவை மேற்கொள்ளுங்கள்.

துன்பங்களும், கஷ்டங்களும் ரமலான் மாதத்தில் மட்டுமே வருவதில்லை! பல்வேறு காலகட்டங்களில் வருகின்றன. ஆகவே, கஷ்டம் வரும்போது மட்டும் நீங்கள் துஆ கேட்க வேண்டாம் என்று அல்லாஹ் கூறுகின்றான். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த துன்பங்கள் இதுவரை வெளிப்படவில்லையோ அந்த துன்பங்களிலிருந்தும் காப்பாற்றுவதற்கு துஆ உதவி செய்யக் கூடியதாக இருக்கின்றது.

ஆகவே நிரந்தரமாக துஆவின் மூலமாக பயன்பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுடைய இறைவன் ஒவ்வோர் இரவிலும் கீழ் வானம் வரை இறங்குகின்றான். இரவின் மூன்றாம் பகுதி எஞ்சி இருக்கும்போது, என்னை அழைக்கக் கூடியவர் யாராவது இருக்கிறாரா? நான் அவருக்கு பதில் கொடுக்கின்றேன். என்னிடம் வேண்டக் கூடியவர் யாராவது இருக்கிறாரா? நான் அவருக்கு வழங்குகின்றேன். என்னிடம் பாவமன்னிப்பு கேட்கக்கூடியவர் யாராவது இருக்கிறாரா? நான் அவரை மன்னித்து விடுகின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

இது ரமலானுடன் மட்டும் நிபந்தனைக்குரியது என்று இல்லை! மாறாக, இது பொதுவான விஷயமாகும். துன்பத்தின் வேளையில் தம் துஆக்களை அல்லாஹ் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எவர் விரும்புகிறாரோ அவர் வசதியின் போதும், செழிப்பின் போதும் அதிகமாக துஆக்கள் செய்ய வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆகவே, இந்த விஷயங்கள் மிகவும் அவசியமாகும். அல்லாஹ்வுடன் நமக்கு உறுதியான தொடர்பு இருக்க வேண்டும்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்; (என்) அடியார் எப்படி நினைக்கிறாரோ அப்படியே நான் அவருடன் நடந்து கொள்கின்றேன். அடியார் என்னை நினைவு கூரும்போது நான் அவருடன் இருக்கின்றேன். அவர் என்னை உள்ளத்தில் நினைவு கூர்ந்தால் நானும் அவரை உள்ளத்தில் நினைவு கூருவேன். அவர் என்னை அவையோர் மத்தியில் நினைவு கூர்ந்தால் நான் அதைவிடவும் சிறந்த அவையோர் மத்தியில் அவரை நினைவு கூருவேன். அவர் என்னை நோக்கி ஒரு ஜான் அளவு வந்தால் நான் அவரை நோக்கி ஒரு முழம் அளவு செல்வேன். அவர் என்னை நோக்கி ஒரு முழம் அளவு வந்தால் நான் அவரை நோக்கி இரண்டு முழம் செல்வேன். அவர் என்னை நோக்கி நடந்து வந்தால் நான் அவரை நோக்கி ஓடிச் செல்வேன்.

ஒவ்வோர் அஹ்மதியும் அல்லாஹ்வின் நினைவினால் தம் நாவை புத்துணர்ச்சியோடு வைத்திருக்க முயற்சிக்க வேண்டும். நமது ஒவ்வொரு செயலும், நடவடிக்கையும் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்றால், அது இறைவனை நோக்கி முன்னேறக்கூடியதாக இருக்க வேண்டும். ஓர் அறிவிப்பில் வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: துன்னூன் அதாவது, ஹஸ்ரத் யூனுஸ் (அலை) அவர்கள் மீனின் வயிற்றில் இருக்கும்போது,

لَآ اِلٰهَ اِلَّآ اَنۡتَ سُبۡحٰنَكَ ۖ اِنِّىۡ كُنۡتُ مِنَ الظّٰلِمِيۡنَ

(உன்னையன்றி வணக்கத்திற்குரியவன் எவனுமில்லை. நீ தூய்மையானவன்; நிச்சயமாக நான் அநீதியிழைப்பவர்களைச் சார்ந்தவனாக இருந்தேன்) என்று துஆ செய்தார்கள். இந்த துஆவை எந்த ஒரு முஸ்லிமும் ஏதேனும் துன்பத்தின் போது செய்வார் என்றால் அல்லாஹ் அவருடைய துஆவை நிச்சயமாக ஏற்றுக் கொள்வான்.

அல்லாஹ் அடியார்கள் மீது தயவு காட்டக்கூடியவனாக இருக்கின்றான். அவனே அடியார்களுக்கு துஆக்களை கற்றுக் கொடுத்துள்ளான். திருக்குர்ஆனில் பல்வேறு துஆக்கள் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளனவென்றால் அதற்கான காரணம், நாம் அந்த துஆக்களை செய்ய வேண்டும் என்பதும் அல்லாஹ் அவற்றை நிச்சயமாக ஏற்றுக் கொள்வான் என்பதும் ஆகும். ஆனால் நிபந்தனை என்னவென்றால், நாம் முதலில் அவனுக்கான உரிமையை கொடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆவைக் குறித்து கூறுகிறார்கள்:** இதிலிருந்து நமக்கு கிடைக்கின்ற பாடம் என்னவென்றால் அல்லாஹ் நியதியை மாற்றி விடுகின்றான். அழுது மன்றாடி, தான தர்மங்கள் செய்தால் - ஹஸ்ரத் யூனுஸ் (அலை) அவர்களின் சமுதாயத்தில் நிகழ்ந்த சம்பவத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்,

தண்டனை விதிக்கப்பட்ட பிறகும் கூட அது ரத்தாகி விட்டது.... எவர்கள் துன்பம் இறங்குவதற்கு முன்பு துஆ செய்கிறார்களோ, இஸ்திக்ஃபார் செய்கிறார்களோ, தான தர்மங்கள் செய்கிறார்களோ அவர்கள் மீது அல்லாஹ் கருணை காட்டுகின்றான். இறை தண்டனையிலிருந்து அவர்களை காப்பாற்றி விடுகின்றான்.

கடந்த நாட்களில் நான் துஆவின் பக்கம் கவனமூட்டியிருந்தேன். அதில் இஸ்திக்ஃபாரின் பக்கமும் கவனமூட்டியிருந்தேன். இஸ்திக்ஃபார் என்பது ஒரு கேடயமாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே, அதன் பக்கமும் கவனம் செலுத்துங்கள். அதிகமான அளவில் இஸ்திஃபார் செய்யுங்கள். உண்மையான உள்ளத்துடன் துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். ரமலானுக்கு பிறகும் துஆக்கள் மற்றும் நன்மைகளில் நிலைத்திருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். பிறகு, இறைவன் எவ்வாறு நம்மை நோக்கி ஓடி வருகிறான் என்றும், நம்மை தன் மடியில் எடுத்துக் கொள்கிறான் என்றும் பாருங்கள்!

*ஹுஸூர் அவர்கள் துஆக்களின் பக்கம் கவனமூட்டியவாறு கூறினார்கள்:* இன்றைய நாட்களில் உலகில் சில இடங்களில் காணப்படும் சூழ்நிலைகள் - பாகிஸ்தான், பங்களாதேஷ், அல்ஜீரியா போன்ற நாடுகளிலும், ஆப்பிரிக்காவின் சில நாடுகளிலும் சில குழுக்களின் ஆதிக்கங்கள் உள்ளன அல்லது அந்த குழுக்கள் சார்பாக தாக்குதல் நடத்தப்படுகின்றன. அரசாங்கங்களும் அவற்றைக் கண்டு அஞ்சி அவர்களின் விஷயத்தை ஒப்புக்கொள்கின்றன. அல்லாஹ்வே! இந்த அநீதியாளர்களிடமிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக. நீயே அவர்களை பழிவாங்குவாயாக என்று நாம் துஆ செய்ய வேண்டும். இவ்வாறு நாம் துஆ செய்யும் போது பிறகு அல்லாஹ் நிச்சயமாக ஒரு மாபெரும் புரட்சியை உருவாக்குவான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இறை அருளை பெறுவதற்கு மிகவும் நெருக்கமான வழிமுறை துஆவாகும். துஆ முழுமையடைவதற்கு அதில் உருக்கம், மன்றாடுதல் மற்றும் விண்ணப்பம் ஆகிய அவசிய அம்சங்கள் இருக்க வேண்டும்.

துஆக்களின் பக்கம் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த ரமலானை எப்படிப்பட்ட ரமலானாக நாம் ஆக்க வேண்டும் என்றால், துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான ரமலானாக இது ஆக வேண்டும். நம்மிடத்தில் நிரந்தரமான தூய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக இந்த ரமலான் ஆக வேண்டும். அனைத்து எதிரிகளிடமிருந்தும் அநீதியாளர்களிடமிருந்தும் அல்லாஹ் நம்மை காப்பாற்றுவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)